வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 725/2020

வழக்கு சாட்சி LW2 / PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலாவதி | ஜாதி | |
| கணவர்/தந்தை | முகுந்த ராமானுஜம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 45 |

தேதி 07.11.2025

எதிரி ஆஜர் இல்லை. மனுதாரர் தரப்பு 355 BNSS பிரிவின் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

நான் மாத்தூர் பகுதியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். எனது கணவர் 29 ம் தேதி 2019-ம் வருடம் மாதம் ஞாபகம் இல்லை. அதிகாலை 01.30 மணியளவில் என் கணவர் டீ சாப்பிட செல்லும் முன்பு வீட்டை பூட்டி ஜன்னலில் சாவியை வைத்து விட்டு கடைக்கு சென்றார். வீட்டின் உள்ளே நானும், என் குழந்தைகள் தூங்கி கொண்டிருந்தோம். 02.00 மணியளவில் நான் கண்முழித்து பார்த்தபோது அருகிலிருந்த அறையில் கதவு திறந்து பீரோ உடைக்கப்பட்டு பொருட்கள் சிதறிக்கிடந்தது. வாசல் கதவு திறந்திருந்தது. நான் அருகிலிருந்தவர்களை அழைத்தபோது பக்கத்து வீட்டுக்காரர் கடையில் இருந்த என் கணவரை அழைத்து வந்தார். அறையில் இருந்த பீரோவும் திறந்து 10 1/4 சவரன் நகை திருடு போயிருந்தது. காலை காவல் நிலையம் சென்று எனது கணவர் புகார் அளித்தார். அதில் 6 சவரன் செயின், 3 பவுன் வளையல், 1/4 சவரன் மோதிரம், 1/2 சவரன் கம்மல் ஆகும். 9 மாதங்கள் கழித்து போலிசார் நகை கிடைத்துவிட்டதாக கூறினார்கள். நீதிமன்றத்தில் மனு செய்து எனது கணவர் பெற்றுக்கொண்டார். யார் திருடியது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். நகைக்குரிய ரசீது உள்ளதா என்றால் இல்லை. எனது திருமணத்திற்கு போட்ட நகை. சொன்ன நேரத்தில், சொன்னபடி சம்பவம் ஏதும் நடக்கவில்லை என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை